புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 13. TML1152 - நவீன இலக்கியங்களில் மகளிர் பதிவுகள்

தேன்மொழி. பா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு.

### முன்னுரை

நவீன இலக்கியங்களில் மகளிரின் பதிவுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இணை கண்டுள்ளது. இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு பெருகி வருவதோடு, அவர்களின் சமூக, அரசியல், பொருளாதாரம், குடும்ப வாழ்க்கை, தனிமனித உணர்வுகள் ஆகிய பல்வேறு கோணங்களில் தங்களது அனுபவங்களையும் பார்வைகளையும் வெளிப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

### ஆய்வு சுருக்கம்

நவீன இலக்கியங்களில் மகளிர் பதிவு என்பதைப் பெண்களின் வாழ்க்கை அனுபவங்கள்,சமூக அவலங்கள், ஆணாதிக்கம், சுதந்திரம், மற்றும் அடையாளத் தேடல் ஆகிய விஷயங்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் இலக்கிய ஆக்கங்கள் ஆகும். இவை கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வு கட்டுரை, வாழ்க்கை வரலாறு போன்ற பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன.

### திறவுச் சொற்கள்

பெண்கள் எழுத்து, பெண்ணிய எழுத்து, பெண்களின் உரிமை, பாலின சமத்துவம், எதிர்ப்பு,பெண்களின் அடையாளம், சமூக விமர்சனம்,மகளிர் சுய நிலை ஆக்கம், பெண்கள் ஆக்கம், மகளிர் எழுத்தாளர்கள், நவீன பெண் எழுத்து,பெண்கள் வாழ்க்கை அனுபவம், பெண்களின் உரிமை போராட்டம், சுயசரிதை இலக்கியம், சமூக மாற்றம், மகளிர் சிந்தனை, பெண்கள் உழைப்பாளி. இவை மகளிர் பதிவுகளை ஆராயும் போது முக்கியமான கூறுகளாக கருதப்படுகின்றது.

### கல்வி வளர்ச்சியில் பெண்கள்

பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பெண்கள் தங்களின் தனிப்பட்ட அனுபவங்களை எழுதத் தொடங்கியுள்ளார்கள்.

“ஒரு பெண் கல்வி பெற்றால், அந்த குடும்பம் மட்டும் அல்ல அந்த சமூகமே எழுச்சி பெறும்.”

ஒரு பெண் கல்வி அறிவு பெறும்போதே முழு சமூகத்திற்கே முன்னேற்றம் ஏற்படுகிறதுலட்சுமி கூறுகிறார்.

“பெண்கள் சுயமாக வாழவும் தீர்மானங்களை எடுக்கவும் தொடங்கினாலே சமூகம் முற்றிலும் மாறிவிடும்.”

ஒரு பெண் சுயமாக வாழ தொடங்கினால்,அது ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்தும்என்று கூறுகிறார்பெரியார்.

“அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு?” என்று பாரதியார் கூறுகிறார். இவர்களின் படைப்புக்கள் சமூக மாற்றங்களைக் கொண்டு வர உறுதுணையாக இருக்கின்றது. டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் மருத்துவத்தில் முதல் பெண்மணியாக வந்து பெண்களுக்கு முன் உதாரணமாக வந்தவர் பெண்கள் அனைவரும் அனைத்து துறைகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்கள். வீட்டை விட்டு வெளி வரவே தயங்கிய பெண்கள் இன்று விண்வெளியில் பறக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் பெண்கள் சிறந்த இடத்தை தேர்ந்தெடுத்து அத்துறையில் சாதித்து வருகிறார்கள் விண்வெளிக்குச் சென்று கல்பனா சாவ்லா வெற்றி பெற்றார் விண்வெளியிலும் கால் தடம் பதிக்க முடியும் என நமக்கு முன்

*உதாரணமாக சென்றவர் இவர்.இது போன்ற பல பெண்கள் இன்று ஒவ்வொரு துறையிலும் கால் தடம் பதித்து வருகிறார்கள்.*

*“முழு முதல் பொருள் பெண் ஆண் வடிவாய் பொழிகிறது” (பெண்.பெரு. பக். 4)*

*என்ற உண்மை முதல்முதலில் நம் நாட்டவரால் காணப்பெற்றது.*

*வானூர்தி இயக்குபவர், பேருந்து ஓட்டுநர், தொடர்வண்டி இயக்குபவர், விண்வெளித் துறையில், தொல்லியல் துறையில் இது போன்ற எண்ணற்ற துறையில் பெண்கள் கால் தடம் பதித்து வருகின்றனர்.*

**சமுதாயத்தில் பெண்களை பற்றிய விமர்சனங்கள் :**

*குடும்பத் திணிப்புகள், வேலைவாய்ப்புநு கல்விநு தன்னம்பிக்கை இத்தகைய விடயங்களை மையமாகக் கொண்டும் அவர்களின் குடும்ப சூழ்நிலைகள், சுற்றுச்சூழலில் ஏற்படுகின்ற விமர்சனங்களைக் கொண்டும், வேலைப் பணியில் இருக்கின்ற பெண்கள். பணியில் இருக்கின்ற பிரச்சனைகளை மேற்கொள்வதோடு செல்லும் வழியில் தன்னை சுற்றியுள்ள சமூகத்தின் விமர்சனங்களைக் கொண்டும், கதைகளை எழுதி இருக்கிறார்கள். இன்றளவும் நவீன காலத்தில் ஏற்படுகின்ற விமர்சனங்களை ப் பற்றியும் எழுதி வருகிறார்கள்.*

*“பெண்களின் சிந்தனை மாற்றம் மட்டுமே சமூகத்தையே மாறச் செய்யும்.”*

*ஒரு பெண் தனது வாழ்க்கையை தீர்மானிக்க தொடங்கினால் அதன் தாக்கம் முழு சமுதாயத்திலும் இருக்கும் இன்று சுஜாதா அவர்கள் கூறுகிறார்கள்.*

*“பெரிய மாற்றங்கள் புரிய பெண்கள் தங்கள் உரிமைகளைக் கேட்க தொடங்க வேண்டும்.”*

*ஒரு சமூகத்தில் மாற்றம் வர, பெண்கள் தங்கள் உரிமைகளை கேட்க தொடங்க வேண்டும்என்று சாலமன் பாப்பையா கூறுகிறார் .*

*“பெண்ணின் சுதந்திரம் என்பது சமூகத்தின் விழிப்புணர்வின் அளவுகோல்.”*

*ஒரு பெண் எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறாள் என்பது,அந்த சமூகம் எவ்வளவு விழிப்புணர்வுடன் இருக்கிறது என்பதற்கான அளவுகோல்என்று சுந்தர ராமசாமி கூறுகிறார்.*

**பெண்களின் சமூகப் பார்வையில் பிரதிபலிக்கும் கலைஞிகள் :**

*மாலதி மாதவன் , சுமதி, அசோக் மித்ரா. இன்னும் மிகுதியான படைப்பாளிகள் இருக்கிறார்கள். மீண்டும் நவீன கால படைப்பாளிகளும் மிகுதியாக வந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.*

*“பெண்மையை மதிக்காத சமூகம் எந்த முன்னேற்றத்திற்கும் தகுதியற்றது.”*

*ஒரு சமூகம் பெண்களை மதிக்கவில்லை என்றால்,அது எவ்வளவு வளர்ச்சி அடைந்தாலும் பயனில்லை.*

*“அறிவுடை மகளிர் அனைவர்*

*அரிய பொருள் தேடுவர்.”*

*அறிவுள்ள பெண்கள் எல்லோரும் அரிய கல்வியை தேடுவார்கள்என்று அவ்வையார் கூறுகிறார்.*

*“பெண்களே மிகச்சிறந்த அகராதிகள்”*

*(பெண். சுவடு. பக்.81)*

*மெச்சிகோ மக்கள் மத்தியில் பெண்களின் மிகச்சிறந்த அகராதிகள் என்னும் பழமொழி இன்றும் வழங்குகின்றது.*

**நவீன இலக்கிய வகைகள்:**

*சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், புதுக்கவிதை , ஹைக்கூ கவிதை, மரபுக் கவிதை, இலக்கிய கவிதை, சமூக கவிதை, உறவு கவிதை, பயணக் குறிப்புகள், ஆவண பதிப்புகள் இவ்வாறு பல்வேறு வகைகளில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள்.சிலப்பதிகாரத்திலிருந்து நவீன தமிழ் கவிஞர்கள் வரை பெண்களின் குரல் எழுச்சி இணை கண்டுள்ளனர்.*

**நவீன கால பிரபல பின் எழுத்தாளர்கள் :**

*“பெண்ணை உயர்த்துங்கள் சமுதாயம் உயர்ந்துவிடும்.”*

*ஒரு பெண்ணை உயர்த்தினால்,சமூகம் முழுவதுமாக உயர்ந்து விடும்என்று பே அருணாச்சலம் கூறுகிறார்.*

*“பெண் தனது வாழ்க்கையின் ஓட்டத்தைத் தனக்காக எழுத தொடங்கிய போது தான், சமூக மாற்றம் துவங்குகிறது”.*

*ஒரு பெண் தனது வாழ்க்கையைத் தனக்காக வடிவமைக்க தொடங்கும் போது தான் சமூக மாற்றம் ஏற்படுகிறதுஇன்று லட்சுமி கூறுகிறார்.*

*“வெகுஜன தொடர்புசாதனங்களில் முக்கியமானது பத்திரிக்கை துறை”*

*(பெண்.வார். வள பக்.90)*

*இந்திரா பார்த்தசாரதி – பெண்களின் மனோபாவங்களை மிக நுட்பமாக எழுதிய எழுத்தாளராவார்.*

*சிவசங்கரி – பெண்களின் குடும்ப உறவுகள் பற்றியும் பெண்களின் வாழ்வியல் பாதைகளைப் பற்றியும் வடிவமைத்த எழுத்தாளர் ஆவார்.*

*சல்மா – பெண்களின் சமூக நிலையினை வெளிப்படுத்தி அவர்களின் சமூக நிலையினை அழகான வரிகள் மூலம் வெளிக்கொண்டு வந்த எழுத்தாளர் ஆவார்.*

*மாலதி மைத்திரேயி – பெண்களைப் பற்றிய உளவியல் கருத்துகளையும்,சமூக அனுபவங்களையும் தெளிவாக விவரிக்கும் எழுத்தாளராவார்.பெண்களுக்கு ஏற்படுகின்ற அனைத்து விதமான அனுபவங்களையும் எடுத்துரைக்கின்ற எழுத்தாளர் ஆவார்.*

**நவீன காலத்தில் பெண்களின் போக்குகள்**

*பெண்ணிய எழுத்துக்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.பெண் எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், கலைஞிகள் எனப் பெண்கள் எழுத்துக்கள் மூலம் வெளிக்கொண்டுஇருக்கிறார்கள்.*

*“நிமிர்ந்து நில்,இது புதிய யுகம்; பெண்களும் புரட்சியே வழிநடத்துவார்கள்”.*

*பெண்கள் தங்கள் உரிமைகளை அடைந்தால்,அதுவே சமூக முன்னேற்றத்தின் அடையாளமாக மாறும். சமூக ஊடகங்களான முகநூல் ,புலனம், வலையொளி ,பட வரி, கீச்சகம், தொலைவரி, அலாவி போன்ற அனைத்து வகையிலும் பெண்கள் தங்களின் கருத்துக்களைப் பகிர்ந்து வருகிறார்கள். மகளிர் வாழ்க்கை முறைகளையும் வாழ்வியலையும் மையமாகக் கொண்டு பல வகையான நவீன தமிழ் நாவல்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.*

**நவீன இலக்கியத்தில் பெண்களின் பங்குகள்**

*நவீன இலக்கியத்தில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக மாறி உள்ளன.இவர்கள் எழுதும் படைப்புகள் சமூகத்தின் வண்ணங்களை அவர்களின் தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கையின் உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.*

*“பெண்கள் நடமாடத் தொடங்கிய போது,வீடுகளும்,தெருக்களும்,நகரங்களும் புதிய பரிணாமங்களை அடைந்தன.”*

*ஒரு பெண் வீடுகளுக்குள் சிக்கி இருக்காமல் வெளியில் வந்து நடந்தால் சமூகமே புதிய மாற்றங்களைக் காணும் என்று பாலகுமாரன் கூறுகிறார். “பெண்ணின் மனம் ஒரு கடலே,அதில் எத்தனை புயல்கள் வந்து சென்றாலும் அமைதி தேடும் தன்மை அதற்கே உரியது”. ஒரு பெண்ணின் மனம் ஒரு கடல் போன்றது.எந்த புயலும் அதை நிரந்தரமாக மாற்ற முடியாது என்று அண்ணாமலைகூறுகிறார்.*

*“பெண் கல்வி என்பது தேசிய அளவில் முக்கியமானது அதனால் இதற்கு மைய அரசு அதிக அளவில் பொறுப்பேற்க வேண்டும்“.*

*(பெண்.வர.விடு. போரா. பக். 658)*

*இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு பெண்கள் கல்வியில் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களை நன்கு ஆராய்ந்து தீர்வுகளைப் பரிந்துரைக்கேற்ற ஒரு தேசிய குழுவை அமைத்திட வேண்டும் என்று முடிவு செய்துமைய அரசுக்கு குழு பரிந்துரை செய்தது.*

*விஜயலட்சுமி – நவீன இலக்கியத்தில் பெண்கள் எழுத்து , அவர்களின் மன உணர்வுகளையும்,சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தும் ஒரு சுய விழிப்புணர்வு ஆகும்.*

*மாலதி மைத்திரி – பெண்கள் எழுதுவது மட்டும் இல்லை அவர்கள் புதிய பரிமாணங்களை உருவாக்கி இலக்கியத்தின் திசைகளை மாற்றுகின்றனர்.*

*கண்ணகி கண்ணன் – நவீன தமிழ் இலக்கியம்,பெண்களின் எழுத்தில் மூலம் ஒரு புதிய உரையாடலை உருவாக்கி வருகின்றன.*

*வயலார் ராமவர்மா – ஒரு பெண் எழுத்தாளராக இருப்பது தனியாக எழுதுவது அல்ல; அது ஒரு சமூகத்துடன் உரையாடிக் கொள்வது ஆகும்.*

*விருதாச்சலம் கோவிந்த ராசி – பெண்களின் எழுத்துக்கள் சமூகத்தின் ஓர் ஆழமான பரிசோதனை;அது சமூகவியல் மட்டுமல்ல,வாழ்வியல் கூட என்கிறார்.*

*சல்மா – பெண்களின் உண்மையான சுதந்திரம் என்பது அவர்கள் பேசுகின்ற சொற்களில் வெளிப்படும் நேர்மையிலும் நம்பிக்கையிலும் இருக்கின்றன.*

*தபஸ்ஸீம் – நவீன இலக்கியத்தில்பெண்கள் எழுதியதெல்லாம்,அவர்கள் எதிர்கொண்ட வரலாற்றின் பிரதிபலிப்பாகும்.*

*மீரா – பெண்கள் எழுதுவதை தொடங்கியதும் ஒரு புதிய குரல் ஒலிக்க தொடங்கியது.அது கேட்கப்பட வேண்டும்.*

**முடிவுரை :**

*நவீன இலக்கியங்களில் மகளிர் பதிவுகள் பெண்களின் வாழ்க்கை அனுபவங்கள்,சமூக அமைப்புகளின் தாக்கம்,பாலின சமத்துவம்,பெண்களின் உரிமைகள்,மற்றும் அடையாளத் தேடல் போன்ற பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான பகுதியாகும்.இவ்வகை எழுத்துக்கள் பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும்,சமூக மாற்றத்திற்கு வழி வகுப்பதற்கும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாக செயல்படுகின்றன.மகளிர் எழுத்துக்கள் இலக்கிய உலகில் மட்டுமல்லாது,சமூக மாற்றத்திலும் முக்கிய பங்கை வகிக்கின்றன.பெண்கள் தங்கள் இடத்தை அடையும் போராட்டத்தையும்,சமூகத்தால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளையும் அதற்கு எதிரான எதிர்ப்புகளையும் இந்த பதிவுகள் வெளிப்படுத்துகின்றது. ஆகவே,மகளிர் பதிவுகளை ஆய்வு செய்வது,இலக்கியத்தின் வளர்ச்சியைப் புரிந்து கொள்வதோடு,பெண்களின் சமூக பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.இந்த ஆய்வுகள் தொடர்ந்தும் வளர்ந்தால் பெண்ணிய இலக்கியம்மேலும் பல கோணங்களில் பரவலாக மாறும் வாய்ப்பு உள்ளன.*

**துணைநூற்ப்பட்டியல்**


திரு.வி.கல்யாண சுந்தரனார் – பெண்ணின் பெருமை,
முதற்பதிப்பு – நவம்பர் 2008,
பதிப்பாசிரியர் –எஸ். கௌமாரிஸ்வரி
சாரதா பதிப்பகம்,சென்னை 14

சாந்தி சச்சிதானந்தம் –பெண்களின் சுவடுகள்.
முதல் பதிப்பு – 1989
வெளியிட்டவர் – தமிழியல்.

பாரதி –பெண் வார்ப்பும் வளர்ப்பும்.
முதற் பதிப்பு – டிசம்பர் 1993
பூஞ்சோலை பதிப்பகம்
11 சிவபிரகாசம் தெரு, பாண்டி பஜார் ,
தி நகர், சென்னை 600017.

ப. சு.சந்திரபாபு இல.திலகவதி –பெண் வரலாறும் விடுதலைக்கான போராட்டமும்
முதற்பதிப்பு டிசம்பர் 2011
வெளியீடு –பாரதி புத்தகாலயம்
421 அண்ணா சாலை, தேனாம்பேட்டை
சென்னை 600018